★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No· QB/8945/78

மலர் 21 சித்திரை 31 ஜு-அகிர்: 16 இதழ்: 94
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-5-79

RECEIVED
17-5-79
PERIODICALS
DIVISION
LIBRARY

பல்க்கன் 150 C. C.
ஸ்கூட்டர்கள்
இன்று எல்லோரும் விரும்புவது
அதிக கவர்ச்சியும்,
அதி சிறந்த கலர்களில் பெற்றுக்கொள்ள
50 வீதம் முற்பணம் செலுத்தி
பதிவு செய்துகொள்ளுங்கள்
முற்பணம் செலுத்துபவர்களுக்கு மட்டும்
விபரங்களுக்கு:
பல்க்கன் ஏஜன்ஸி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685
2432

கீழ்கண்டவைகளுக்கு சப்ளை
செய்பவர்கள்
தேவை
சுருசெட்டை வெள்ளை, கறுப்பு
கடல் அட்டை, கடல் பாசி,
இறல், சிங்க இறல், நண்டு
தொகையாகத் தரக்கூடியவர்கள்
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
குட்வில் (T) ரவல்
Goodwill Travel
No. 635, ஆஸ்பத்திரி வீதி,
[சிங்கள பாடசாலை முன்பாக]
யாழ்ப்பாணம்.

# ஷாவுக்கும், மனைவிக்கும் மரண தண்டனை!

## எந்த ஒரு நபரும் இவர்களைக் கொலை செய்ய ஈரானிய புரட்சி நீதிமன்றம் அனுமதி!!

(ஹெரான்)

முன்னாள் ஈரான் மன்னர் ஷாவுக்கும், அவரது பாரியாருக்கும் ஷாவின் ஆட்சிக் காலத்தில் பணியாற்றிய முன்னாள் பிரதமர்கள் மூவருக்கும் ஈரானிய இஸ்லாமிய புரட்சி நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இவர்கள் எவரும் நீதிமன்றத்தில் சமுகமளிக்காத நிலையிலேயே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக புரட்சி நீதிமன்றம் அறிவித்துள்ளது

இஸ்லாமிய புரட்சி நீதிமன்றத்தலைவர் அயத்துல்லா சாதிக்அலி இதுபற்றி தெரிவிக்கையில் புரட்சி நீதிமன்றத்தின் தீர்ப்பை எந்தவொரு நபரும் எந்த ஒரு இடத்திலும் நிறைவேற்றலாம் என்றும் ஷாவும் அவரது மனைவியும் மூன்று முன்னாள் பிரதமர்களும் எந்த இடத்திலாவது கொலை செய்யப்பட்டால் அது புரட்சி நீதிமன்றத்தின் தீர்ப்பு நிறைவேற்றப் பட்டதாகவே கருதப்படும் என்றும் அப்படி தண்டனை நிறைவேற்றப்படும் பட்சத்தில் எந்த ஒருநாடும் இவ் விஷயத்தில் தலையிட உரிமை இல்லை என்றும் இஸ்லாமிய புரட்சி நீதிமன்றத்தின் தீர்ப்பு நிறைவேற்றப் பட்டதாகவே கருதப்படவேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்,

# ஆந்திரா சூருவளி: 20 லட்சம் பேர் பாதிப்பு!

(விஜயபாடா)

ஆந்திரப் பிரதேசத்தில் வீசிய சூருவளி, நெல்லூர் உட்பட சில மாவட்டங்களை கொடுமையாக சூறையாடி விட்டபோதிலும், தகவல் தொடர்புகள் துண்டிக்கப் பட்டிருப்பதால் சேத விபரங்களை உடனடியாக மதிப்பிட முடியாதிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் திரு சென்னாரெட்டி நேற்றிரவு கருத்து வெளியிடுகையில், யுத்தகால அடிப்படையில் சூருவளி நிவாரண வேலைகள் மேற் கொள்ளப்படுகின்றன என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் உத்தியோக நிகழ்ச்சிகள் யாவும் ஒரு வார காலத்துக்கு ரத்துச் செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடைசியாக கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி சூருவளின் மோசமான கட்டம் நேற்றிரவுடன் நீங்கிவிட்டதாகவும் இருபது லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீட்பு வேலைகள் நடைபெறுவதாகவும் தெரிய வருகிறது.

## பூட்டோ சடலம்

(லாகூர்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவின் சடலத்தை பரிசோதனை செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை லாகூர் உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்து விட்டது.

## தஞ்சை தேர்தலில் தமிழ்நாடு ஜனதா தி. மு. க.வுக்கு ஆதரவு

[சென்னை]

தஞ்சாவூர் இடைத்தேர்தலில் தி. மு. க. வேட்பாளரை ஆதரிப்பதென்று தமிழ்நாடு ஜனதாக்கட்சி முடிவு செய்துள்ளது. இத்தொகுதியில் தி. மு க வை ஆதரிப்பதென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தீர்மானித்து,

# வடபகுதிக்கு மேலும் 100 பஸ்கள்: அமைச்சர் உறுதி

[யாழ்ப்பாணம்]

வடபகுதியின் போக்குவரத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் நூறு பஸ்கள் வடபதிக்கு அனுப்பப்படும். அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் இதுவிஷயமாக நான் தொடர்பு கொண்டுள்ளேன்

இவ்வாறு யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது பேசுகையில் கூறினார்,

ஜனாப் ஷாஹுல் ஹமீது தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் எம். எச் முஹம்மது தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எல்லா மாவட்டங்களுக்கும் மாவட்ட அமைச்சர்களை நியமித்து, மாவட்டங்களின் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்க முற்பட்டபோது யாழ் மாவட்டத்திற்கு மாவட்ட அமைச்சரை நியமிக்கவேண்டாம் என்றும் திரு. அமிர்தலிங்கம் வெளிநாட்டில் இருந்து வந்ததும் நாம் அப்பதவியை ஏற்போம் என்றும் அரசுடன் ஒத்துழைப்போம என்றும் கூறிய கூட்டணியினர், திரு அமிர்தலிங்கம் நாடு திரும்பிய பின்னர் இது பற்றி கதைக்கவில்லை. இதனால் வடபகுதியின் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் போயிற்று. அதேபோல் முல்லைத்தீவு எம். பி யும் முல்லைதீவு மாவட்டத்திற்கு மாவட்ட அமைச்சரை நியமிக்கவேண்டாம் என்றும் தாம் மாவட்ட அமைச்சர் பதவி ஏற்பது பற்றி யோசிப்பதாகவும் கூறியுள்ளார். இவ்விதமாக காலம் போய்க்கொண்டிருப்பதால் மாவட்டங்களின் அபிவிருத்தி வேலைகள் பின்போடப்பட்டு வரு

(8-ம் பக்கம பார்க்க)

## பனுமாக் கப்பலில் 31 பேர் மீட்பு

(சென்னை)

மூழ்கிக் கொண்டிருக்கும் பனுமா கப்பலிலிருந்து 31பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இக்கப்பலில் 32 மாலுமிகள் இருந்ததாகவும் ஒருவர் உயிர் தப்பி கடலுக்குள் குதித்த பின்னர் மரணமாயிருக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

## ரூ. 3000 கைதவறிவிட்டது

தர்மநிதிக்காக சேகரிக்கப்பட்ட ரொக்கப்பணம் மூவாயிரம் ரூபா யாழ் ஸ்டான்லிவீதி கொழும்பு ஸ்ரூடியோவுக்கு முன்பாக 12ம் திகதி சனிக்கிழமை மாலை ஐந்துமணி அளவில் தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' வில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
2439

## விற்பனைக்கு

இங்கிலாந்தில் [U K[ இருந்து இறக்குமதி செய்யப்பட்ட B M C 350 F G வான்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ளவும்:
இ. தொண்டமான்
சேகரம் கட்டடம்,
74, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 693.
2430

## மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
Mackinnon Travel Service (Ceylon) Ltd.

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கிவருகிறது.
இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்குசெய்துகொள்ளலாம். உங்கள் பிரயாண ஒழுங்குகளை
மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட். ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.
8, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!
2424

## ரெலிவிஷன் (TV) உங்கள் வீட்டில்

உங்கள் கையிருப்புக்கு ஏற்றபடி ரெலிவிஷன் வாங்கி உங்கள் வீட்டில் பார்த்து மகிழுங்கள்.
விலை 2000/- முதல் 6000/- வரை
பலவகை உண்டு. கலர் டெலிவிஷனும் கிடைக்கும்.
உங்கள் திருப்திக்கு ஏற்றவாறு டெலிவிஷனை தெரிவுசெய்ய மாலை 6-00 மணிக்குப்பின் 9-30 வரை நேரில் விஜயம் செய்து உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யுங்கள்
நியூ விக் ரேஸ்,
23, மணிக்கூட்டு வீதி - யாழ்ப்பாணம்.
புதிய தொலைபேசி: 7804

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம், ஜேயல் டிஸ் பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவி யாளர் உடன் தேவை. நேரில் வரவும். 2422

காரம்பன் கிழக்கில் இருக் கும் பாக்கியம் வைத்திய சாலை, ஆயுர்வேத வைத்திய ருக்கு உதவியாளர்களாகக் கடமையாற்றுவதற்கு பெண் பாலார் தேவை. க. பொ. த. பரீட்சையில் ஆங்கிலம் உட் பட ஆறு பாடங்களில் சித்தி யடைந்தவராக இருத்தல் வேண்டும். உணவும் தங்கு மிட வசதியும் உண்டு. திற மைக்கேற்ப ஊதியம் வழங்கப் படும். புதன், ஞாயிறு தவிர் ந்த ஏனைய கிழமை நாட்களில், நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். பாக்கியம் வைத்தியசாலை, காரம்பன் கிழக்கு, ஊர்காவற் றுறை. 2436

### விற்பனைக்கு

A 40 சோமசெற், முன் புதிய பவர்கொம்புடன் A 40 பியறிங் எல்லா சைஸ்சிலும், Original மொறிஸ் மைனர் பியறிங் எல்லாசைஸ்சிலும், மயினர் றெடியேற்றர், B.M.C. இஞ்சின், ஸ்ரியறிங் கொம் பிளீற், 22ஸ்ரீ, 24ஸ்ரீ, B.M.C. பிஸ்ரன் ஸிலிவ். தொடர்பு கொள்ளவும். யாழ்தேன் ரான்ஸ்போட் சேவிஸ், நல்லூர் மாக்கற், யாழ்ப்பாணம் தொலைபேசி 7210. 2419

புங்குடுதீவு மகாவித்தியால யத்திற்கு அருகாமையில் பிர தான வீதியில் 8 பரப்புக் காணி அரசினர் ஆஸ்பத்திரி, தபால் கந்தோர், கிராமசபை சந்தையடி ஆகியவைகளுக்குச் சமீபமாக உள்ளது விற்பனைக் குண்டு. தொடர்பு கொள் ளவும். மு. நாகராசா, குறி காட்டுவான், புங்குடுதீவு. 2429

### வகுப்புகள்

ஆவணி 79 தரித மீட்டல் வகுப்புகளும் 1980 இற்குரிய வகுப்புகளும் கலைவகுப்பாசிரி யர்கள் யோஜ், நோபேட் யேசுராசா விஞ்ஞான வகுப்பு கள் கண்ணன் பிரான்சிஸ் ஆரோக்கியம் பொன்னுத் துரை கில்னர் அக்கடமி காங் கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம் 2405

## ரயில்-பஸ் விபத்தில் 40 பேர் பலி

சென்னை, மே.11

கேரளத்தில் இடம் பெற்ற பஸ்- ரயில் விபத்தில் 40 பேர் பலியாகினர்

இந்த 40 பேரினதும் சடலங் கள் இன்று திருவனந்தபுரத் திலிருந்து சென்னை வந்து சேர் ந்தது.

சென்னை ரயில் நிலையத்தில் கூடிநின்ற இறந்தவர்களின் உறவினர்கள் அழுது புலம் பிய காட்சி பரிதாபமாக இருந்தது.

இறந்தவர்களது உறவினர் களுக்கு ரயில்வே இலாகா 1000 ரூபாவும் அரசு 500ரூபா வும் உதவி நிதியாக வழங்கி யது (இ)

---

## முதலிலேயே முற்றான கட்டளை பற்றி அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற நா. ஆழ்வாப் பிள்ளை நடராஜசுந்தரத்தின் மரணசாதன விடயமாய்.

மரணமெய்தியவர்

நடராஜசுந்தரம் கைம்பெண் விஜயலட்சுமி, புலோலி கிழக்கு

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 1070

மேலேயுள்ள இலக்கமிகொண்ட வழக்கு மேலே சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனறும், 1979 பங்குனி மாதம் 22-ந் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றின் கட்டளைப்படி.

**விஸ்வலிங்கம்**
பதிவாளர்.

1979 சித்திரை 23ம் திகதி.

என்னால் தயாரிக்கப்பட்டது.

எம். ஈசுரபாதம்

மனுதாரின் சட்டத்தரணி.

2359

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

அத்தியடி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ராஜரத்தினம் சிவமணி பெண் மங்கையர்க் கரசி என்பவரின் மரணசாத னத்தின் விடயத்தில்

சண்டிலிப்பாய் டச் வீதியைச் சேர்ந்த ராஜரத்தினம் சிவமணி

-மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3371

எதிராக

1. லேடி பாலாம்பிகை, பராயமற்றவர் தனது வழக்குப் பாதுகாவலராகிய
2. கனகரத்தினம் கனகசபாபதி மூலம், டச் வீதி, சண்டிலிப்பாய்

-எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட மரணம் எய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1979ம் ஆண்டு வைகாசி மாதம் 18ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்த நீதிமன்றத்தின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகிறீர்.

1979ம் ஆண்டு வைகாசி மாதம் 9ம் திகதி நீதிமன்றக் கட்டளையின்படி

**பொ. பாக்கியநாதன்-**
பதிவாளர்.

வை. ச. செந்தில்நாதன், சட்டத்தரணி, யாழ்ப்பாணம் 1854

---

## "யாழ். மாவட்ட அபிவிருத்தியை யு. என். பி.யிடம் ஒப்படையுங்கள்"

### யாழ்ப்பாணத்தில் பொத்துவில் எம். பி.

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் அபிவிருத்திக்காக வடபகுதியின் மாவட்ட அமைச்சராக ஜனாப் மன்சூர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஒத்துழைப்பு நல்கி மேலும் இம்மாவட்டத்தின் அபிவிருத்தி வேலையைத் துரிதப்படுத்த மாநகரசபை நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சியினரிடமே ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொத்துவில் முதலாவது எம். பி. டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன் பேசுகையில் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஜலால்தீன் தொடர்ந்து பேசுகையில்,

பொத்துவில் முதலாவது எம் பி டாக்டர் எம் ஏ எம் ஜலால்தீன் பேசுகையில் கூறியதாவது:

கிழக்கு மாகாண மக்கள் பெற்ற நன்மைகளை வடமாகாண மக்களும் பெற வேண்டுமானால் வடபகுதி மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். அதற்கு எதிர் வரும் 19-ம் திகதி நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்மூலம் நல்லதொரு சந்தர்ப்பத்தை அரசு தமிழ் மக்களுக்கு அறிவித்துள்ளது

கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கோ, கிழக்கோ அன்றி தென்பகுதியோ அபிவிருத்தி அடையவில்லை-ஆட்சியமைத்த ஒன்றரை வருட காலத்தில் எமது அரசு பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து நாட்டை முன்னேற்றியுள்ளது

வல்வை

ராஜினாமா செய்தி பொய்ப்பிரசாரம்

திரு எஸ் சிவபாலசிங்கம பேசுகையில் வல்வெட்டித் துறையில் எமமால் நிறுத்தப் பட்ட வேட்பாளர் இருவர் ராஜினாமா செய்துவிட்டதாக நாட்டில் பொய்ப் பிரசாரம மேற்கொள்ளப்பட்டுவருகிறது இது அப்பட்டமான பொய் மட்டுமல்ல கூட்டணியினர் மக்களை ஏமாற்றி வாக்குச் சம பாதிப்பதற்காக இப்படிச்செய் கின்றனர் என்றார்

திரு ஏ ஜே ராஜசூரியர் உட்பட மற்றும பலரும பேசினர்.

(கொ)

## திருமுறை விழா

(உடுப்பிட்டி)

நெல்லியடி இந்து இளைஞர் மன்றத்தின் 2 வது திருமுறை பெருவிழா அடுத்தமாதம் 9ம் திகதி நெல்லியடியில் நடைபெறுகிறது'

---

"உலக அரங்கில்

## தமிழினத்தின் தனித்துவம் நிலைபெறச் செய்வோம்"

- மாணிக்கவாசகர்

(யாழ்ப்பாணம்)

தமிழனின் தனித்துவத்தை உலகறியச் செய்தது அவனது கலைச்சிறப்புக்களே. அத்தகைய பழைமையும் பாரம்பரியமுமான கலை. கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் தமிழினத்தின் தனித்துவம் உலகரங்கில் நிலைபெறச் செய்யவேண்டும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மானிப்பாய் கலைக்கோவில் மாணவிகளின் நாட்டிய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழின் பெருமையை உலகறியச் செய்வதற்குக் காலத்திற்குக்காலம் நாவலர், விபுலானந்த அடிகள் போன்றவர்கள் தோன்றித் தமிழுக்குப் பணிபுரிந்தார்கள். அவர்களின் நற்பணியால் தமிழன்னை சிறப்புற்றாள். கலைப்பணியில் ஈடுபட்டிருக்கும் 'கலைக்கோவில்' மன்றத்தாருக்கும் அதன் இயக்குநரான திருமதி லீலா செல்வராஜாவுக்கும் நாம் கடமைப்பாடுடையவர்கள்".

நாட்டியவிழாவில் திருமதி லீலா செல்வராஜான் 'கலைக் கோவில்' மாணவிகளின் பல நாட்டிய நிகழ்ச்சிகளும், "சீதாபஹரணம்" என்னும் நாட்டியநாடகமும் இடம் பெற்றன. (கா-அ)

---

தஞ்சாவூரில்

## தி. மு. க.வை ஜனதா ஆதரிக்க வேண்டும்

### பெர்னாண்டஸ் விருப்பம்

சென்னை, மே. 13

தஞ்சாவூரில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில போட்டியிடும் தி.மு.க. வேட்பாளரை ஜனதா கட்சி ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு மத்திய தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சென்னையில் தெரிவித்துள்ளார்

தி மு கவை ஜனதாகட்சி ஆதரிக்கவேண்டும் என்பது தமது சொந்த விருப்பம் என்றும் ஆனால் இதுபற்றி தமிழ்நாடு ஜனதா கட்சியே தீர்மானிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (இ)

---

## மேசனறி சிமெந்து

இலங்கை சிமெந்து கார்ப்பரேஷனால் இச் சிமெந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இச் சிமெந்து உறுதியானதும், பெலமானதும், தரத்தில் சிறந்ததும்.

சகலவிதமான கட்டிடக்கலைவகளுக்கும் சிறந்தாக சிமெந்து விற்பனையாளர்:

E. P. CHELLIAH & SON

25, ஆடியபாத ரோட், நல்லூர். 2431

## விவசாயிகளே !

உங்கள் விவசாயப் பிரச்சினைகள் எதுவானாலும் எங்கள் இலவச அறிவுரைகளுக்கு இன்றே நாடுங்கள்.

எங்களிடம் கலப்படமற்ற:

★ கிருமி நாசினிகள் ★ பசளை வகைகள்
★ தெளிகருவிகள் ★ உதிரிப்பாகங்கள்
★ நீர் இறைக்கும் இயந்திரங்கள்
★ அல்கத்தின் குழாய்கள்
★ மண்வெட்டி, அலவாங்கு முதலிய

விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

AGROS

# அக்ரோஸ் லிமிட்டெட்

56, கந்தப்பசேகரம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(புதிய நிர்வாக அதிகாரி :- ஜெகதிசன்ஸ், கொழும்பு.)

# 'அடுத்த மே தினத்தை நாம் தமிழ்ஈழத்தில் கொண்டாடுவோம்'

## சன்சோனிக் கமிஷன்முன் 'அமிர்' மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

கடந்த மேதினக் கூட்டத்தில் பேசுகையில் அடுத்த மேதினத்தை தமிழ் ஈழத்தில் கொண்டாடும் மனஉறுதியோடு நாம் செயல்படுவோம் என்று பேசினேன். அப்படிப் பேசியதில் எவ்வித தவறுமில்லை;

சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

வெளிநாடுகளிலும் நான் எனது கருத்தைத் தெரிவிக்கையில் அரசுடன் சமாதானமுறையில் பேச்சுவார்த்தை மூலம் எமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளவே நாமவிரும்புகிறோமென்லே தெரிவித்தேன். ஆனால் அரசாங்கம் தான் எம்மை அழைக்கவேண்டும். ஆனால் அது இதுவரைஅழைக்கவில்லை. இப்போது உள்ளுராட்சிதேர்தலும் நடைபெறவுள்ளன.

### அரசு அழைத்தால் செல்வோம்

கமி: அரசாங்கம் உங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் நீங்கள் செல்வீர்களா?

அமிர்: ஆம்; நாம் செல்வோம்.

இத்துடன் அரசசட்டத்தரணி தனது குறுக்கு விசாரணையை முடிக்கவும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு அண்டலூட் மணிவாசகம் திரு அமிர்தலிங்கத்தை மறுவிசாரணை செய்தார். அப்போது திரு.அமிர்தலிங்கம் கூறியதாவது:

தென்னிலங்கையின் 3 பிரதான அரசியல் கட்சிகளும் கடந்த பொதுத்தேர்தலுக்கான தமதுவிஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்னை தொடர்பாகவும் கூறியிருந்தன.

ஐ தே க 'தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள்' என்ற தலைப்பிலும், சு க 'தேசிய ஒற்றுமை' என்ற தலைப்பிலும், ஐக்கியமுன்னணி 'தேசிய சிறுபான்மை இனம்' என்ற தலைப்பிலும் தமிழர் பிரச்னை பற்றிக் குறிப்பிட்டன.

### பிராந்திய சுயாட்சி

ஐ மு பிராந்திய சுயாட்சி வழங்குவதாகக் கூறியிருந்தது. சு க நாட்டின் சகலபிரச்னை பற்றியும் ஆலோசனை கூற தேசிய ஆலோசனைச்சபை ஒன்று நிறுவப்படுமென்று கூறியிருந்தது. சிறுபான்மையினர் பிரச்னை தொடர்பாகவும் ஆலோசனை பெறப்படுமென்று அதில் கூறப்பட்டிருந்தது.

ஆனால், முன்னதாக 7ஆண்டுகள் சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்திலிருந்தபோது தமிழர் பிரச்னையில் அக்கறைகொள்ளவில்லை.

### தமிழர்கள் பிரச்னை பற்றி...

கூட்டணியின் 6 அம்சக் கோரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. ஐ தே க முதற்றடவையாக தமிழர் பிரச்னை பற்றி தனது விஞ்ஞாபனத்தில் கூறியது. இன்று தமிழ் மக்கள் ஈழம் கோருமளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றும் அதில்கூறப்பட்டிருந்தது. கல்வி,வேலைவாய்ப்பு,குடியேற்றம் முதலியவற்றில் தமிழ்மக்களுக்கு பிரச்னைகள் இருப்பதாகவும் ஐ தே க கூறியது.

### சர்வகட்சி மாநாடு

ஆட்சிக்கு வந்ததும் சர்வகட்சி மாநாடு ஒன்றை தமிழர் பிரச்னை தொடர்பாக கூட்டுவதாகவும் கூறியது.

முந்திய காலங்களில் ஒரு கட்சி பிரச்னையை ஓரளவு தீர்க்க முன்வந்தால் மற்றொரு கட்சி அதனை எதிர்க்கும். அது மாத்திரமல்ல பின்னர், எதிர்த்தவர்கள் ஆதரிக்கும்போது, பிரச்னையைத் தீர்க்கமுன்வந்தவர்கள் பின்வாங்குவார்கள்; எதிர்ப்பார்கள்.

### பேச்சுவார்த்தையை விரும்புகிறோம்

நாம் இன்றும் பேச்சுவார்த்தையையே விரும்புகிறோம். மந்திரிசபையில் ஒவ்வொருவிதமான குரல்கள் ஒலிக்கின்றன. அரசு இன்றும் 'தேனிலவில்' தான் ஈடுபட்டிருக்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி சர்வகட்சி மாநாட்டின் பின் புதிய அரசமைப்பை யாக்கும்படி நான் கேட்டேன். அரசமைப்பு திருத்தங்கள் பாராளுமன்றத்தில் பி ப 2 மணிக்கு சமர்ப்பிக்கப்பட்டு 3 மணிக்கு விவாதித்து 4மணிக்கு நிறைவேற்றி விடுவதை இந்த அரசு ஒரு வழக்காகக் கொண்டிருக்கிறது. பந்து இன்று அரசின் பக்கமே இருக்கிறது. நானும் எஸ் ஜே வியும் மற்றையோரும் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து தமிழ்மக்களின் உரிமைக்காக பாடுபட ஆரம்பித்தோம்.

கடந்த முப்பது வருடங்களாக அரசியலில் ஈடுபட்டு எனது கட்சியின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கேற்றிருக்கிறேன்.

மணி: இன்று கட்சியினதும் இனத்தினதும் தலைமையை ஏற்றிருக்கிறீர்கள்.

(அமிர் இலேசாகச் சிரிக்கிறார்)

அமிர்: 4 தடவை சிறை சென்றேன், பல தடவை தாக்கப்பட்டேன். எனது இரத்தத்தையும் சிந்தினேன். என்னுடன் எனது மனைவியும் இவற்றில் கலந்துகொண்டார்.

-- மாலி --

### சிங்கள மக்கள் எதிரிகளல்ல

நாம் எப்போதும் கூறுகிறோம் ஆட்சியாளரே தவிர சிங்கள மக்கள் எமது எதிரிகள் அல்லர். அவர்களின் கலாச்சாரம் நாகரீகத்தை நாம் மதிக்கிறோம்.

### தமிழர்களைக் காப்பாற்றினர்

டன்ஸ் வீதியில் கலவரத்தின் பின்நடைபெற்ற கூட்டத்தில் நான் சிங்களமக்களுக்கு 'நன்றி தெரிவித்திருக்கிறேன்.

"நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் தமது உயிரையே பணயம் வைத்து தமிழரைக் காப்பாற்ற உதவினார்கள்" என தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் கூறியதை நானும் முழுமையாக ஏற்கிறேன்.

சில இயக்கங்கள் இனங்களுக்கிடையேயான ஒற்றுமை நல்லெண்ணத்தை முறித்து தமிழ்க் கட்சிகள்மீது குற்றத்தைச் சுமத்தவும் முயல்கின்றன.

1960 தமிழரசுக்கட்சி மாநாட்டில் நான் பேசும்போது—

"நீங்கள் எங்களை இனவாதிகள் என்கிறீர்கள். நாம் தமிழ்- சிங்கள மக்களிடையே பூரண நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையுமே இந்நாட்டில் ஒரு சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் கோருகின்றோம்'' என்று 1958 கலவரத்துக்கு பின்னர்- இரு ஆண்டுகளின் பின்னர் பேசினேன். நாம் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தபோதே சிலர் நாம் தனிநாடு கோருவதாக பிரச்சாரம் செய்தார்கள்.

'சன்' பத்திரிகையில் 1976 ஆகஸ்ட் 11, 12ல் வெளிவந்த பேராசிரியர் எம்.ஆர். ஜயசூரியாவின் கட்டுரை கலவரத்துக்கான ஓர் அபாய அறிவிப்பு என்றே நான் கருதுகிறேன்.

தமிழரை இந்தியாவுக்கு செல்லும்படி அதில் கூறப்பட்டிருந்தது. அதைக்கூறியே காடையரும் தாக்கினர்.

### தமிழா இந்தியாவுக்குப்போ

என்னைக் கடைசியாக குறுக்குவிசாரணை செய்த பெரமுனே சட்டத்தரணியும் இதையேதான் கூறினார். 'மாத்ரு' பூமி'யில் சிங்கள மக்கள் கூறுவதாக அவர் கூறினார்.

சண்: தமிழா இந்தியாவுக்குப் 'போ' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

விஜய: 'போ' என்பது சரியான வார்த்தையே.

மணி: வார்த்தை சரி; ஆனால் எண்ணம் அருவருப்பானது!

விஜய: சிங்களவர் ஆக்கிரமிப்புக்காரர் என நீங்கள் கூறுகிறீர்கள்.

அமிர்: நாம் ஒருபோதும் அப்படிக்கூறவில்லை. தமிழ் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தையே நாம் எதிர்க்கிறோம்.

### தமிழ்ப்பிரதேசம் ஒன்றில்லை

விஜய: தமிழ்ப் பிரதேசம் என்று எதுவும் இல்லை.

அமிர்: கலவரத்தைத் தூண்ட இக்கட்டுரை காரணமாக இருந்தது.

'கோயபல்'ஸ் தத்துவம் பொய் ஒன்றைக்கூறி, பின் அதனை மறுப்பதல்ல; திரும்பத் திரும்ப பொய்யையேகூறி அதனை உண்மையாக்க முயல்வதே கோயபலின் தத்துவம். கலாநிதி கோயபலின் தலை இறந்த மாணவர்கள் இங்கும் இருக்கிறார்கள்!

பத்திரிகைகளில் வெளிவந்த பல தவறான செய்திகளுக்கு நான் மறுப்புத் தெரிவித்தேன்.

தேர்தலுக்குமுன் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனா செய்தி ஒன்றை தவறாக பிரசுரித்த ஏரிக்கரை நிறுவனம்மீது குற்றம் சுமத்தி வழக்கு ஒன்றை தொடர்ந்து ஒன்றரை லட்சம் ரூபா மான நஷ்டம் பெற்றார்.

திருமதி சிறிமாவோ தான் பேசியதாக பிழையான செய்தியை பிரசுரித்ததாக பாராளுமன்றத்தில் பிரச்னை கிளப்பினார்.

மணி: 'தேசியப்பத்திரிகைகள் என்று சொல்லப்படுகின்ற சில பத்திரிகைகளும் கடந்த கலவரத்துக்கு தமது பங்களிப்பைச் செய்திருக்கின்றன என்றே நான் கூறுகிறேன்.

கமி: நேரடிப் போராட்டம் என்பதற்கு திரு. அமிர்தலிங்கம் இங்கு விளக்கமளித்திருக்கிறார்.

சமாதானமுறை, நேரடிநடவடிக்கை, தன்னலமறுப்புப் போராட்டம் இவற்றுக்கு அவர் அளித்த விளக்கங்கள் எனக்கு திருப்திகரமாக இருக்கின்றன.

[7ம் பக்கம் பார்க்க]

---

# மக்கள் கருத்து

## கூட்டணிக் கொள்கையை ஜி. ஜி. ஆதரிக்கவில்லை

கடந்த 8-5-79 'ஈழநாடு' இதழில் 1972ம் ஆண்டின் பின்னரும் ஜி. ஜி. ஆதரித்தாரா' என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்துக்கு விடையிறுக்குமுகமாக ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தது.

எனது குறித்த கடிதத்தை நன்கு வாசித்து விளங்கியிருந்தால், அக்கடிதம் எழுதுவதற்கான அவசியம் எழுந்திராது.

பதிலாக எழுதப்பட்ட கடிதத்தில், ஜி. ஜி. மறைமுகமாக சமஷ்டிக் கொள்கையை ஆதரிக்கத்தொடங்கினாரெனக் கூறப்பட்டுள்ளது. அரசியல் என்பது குடும்ப இரகசியமல்ல, தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனத்திலும், தனது பாராளுமன்றப் பேச்சுக்களிலும், பொதுமேடைகளிலும் சமஷ்டியமைப்பைச் சாடிய ஜி ஜி., திடீரென மனமாற்றமடைந்து, சமஷ்டிக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாரென்ற வாதத்தைக் கிளப்பினால் அதற்கான ஆதாரங்கள் வேண்டுமே.

'ட்ரயல் அற் பார்' வழக்கில் ஜி ஜி. தமது சமர்ப்பணத்தின் போது நீதிபதிகளிடம் கூறியதை தமிழ்க்காங்கிரஸ், தமிழ் மக்களிடம் சமர்ப்பித்த ஒரு கருத்தாக ஏற்றுக்கொள்ளமுடியாது. ஒரு வழக்கறிஞர், தாம் மேற்கொண்ட ஒரு வழக்கை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவருவதற்காகக் கூறப்பட்டவற்றை உண்மையென ஏற்றுக்கொள்ளமுடியுமா?

காலஞ் சென்ற ஒருவர், 'அவர் உயிருடன் வாழ்ந்த போது இப்படிக்கூறினார். அப்படிக் கூறினார்" என்று கூறுவது பெறுமதியற்றதாகும். அதுவும் ஒரு கட்சித் தலைவரைப் பொறுத்தவரையில், அது, ஜனநாயகக்கோட்பாடுகளுக்கு முரண்பட்டதாகும். ஒரு கட்சியின் தலைவர் தனது கொள்கைகளையும், கொள்கை மாற்றங்களையும் பகிரங்கமாக, பட்டவர்த்தனமாகமக்கள் மத்தியில் முன்வைப்பதையே ஜனநாயக அமைப்பு சந்தித்துள்ளது. இலங்கையில் இன்று உயிருடன் வாழ்ந்துவரும் தலைவர்களெனக் கருதப்படும் அநேகருக்கு அரசியல் போதிக்கக் கூடிய அறிவும் ஆற்றலும் பெற்ற ஜி. ஜி. தாகர் மூலம் தனது கருத்து மாற்றங்களை மக்களுக்கு வெளியிட வேண்டிய அவசியம் எந்தக் கால கட்டத்திலும் ஏற்படவில்லை.

மேலும், தமிழர் கூட்டு முன்னணியினர், முத்தலைவருள் ஒருவராக ஜி. ஜி. யைத் தெரிவுசெய்தது, ஜி ஜி யின் திறமைக்கும், தமிழ்மக்களிற் குறிப்பிடக்கூடிய தொகையினர் தொடர்ந்து அவர்மீது நம்பிக்கை வைத்தமைக்கும் ஓர் உரைகல்லாகும்.

ஆனால் ஜி. ஜி. எப்பொழுதாவது தமிழர் கூட்டணிக் கூட்டங்களிற் கலந்துகொண்டதாகவோ, முன்னணியினரின் பிரிந்துபோகும் கொள்கையை ஆதரித்துத் தமிழ் மக்கள் மத்தியிற் பிரசாரஞ் செய்ததாகவோ எவ்வித ஆதாரமுமில்லை.

தமிழர் கூட்டணியின் பிரிந்துசெல்லும் கொள்கையை அவர் ஆதரித்திருந்தால், அந்த மனமாற்றத்தை ட்ரயல்-அற்-பார் நீதிமன்றத்தின்மூலமோ, அமிர்தலிங்கம் மூலமோ தமிழ் மக்களுக்குச் செய்தியனுப்ப வேண்டிய அவசியமில்லை.

கடிதத்தின் முதலாவது பந்தியில், கூட்டணியில் தமிழ்க்காங்கிரஸ் ஏன் அங்கம் வகித்தது என்ற வினா எழுப்பப்பட்டுள்ளது. தமிழ்க்காங்கிரஸ் கூட்டணியில் அங்கம்வகித்ததென்பதை ஒரு சில தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர் என்பதே பொருந்தும் திரு. சங்கரப்பிள்ளை போன்றோர் தொடர்ந்தும் தமிழ்க்காங்கிரஸிலேயே அங்கத்துவம் வகித்துவந்தனர். இன்று, தமிழ்க்காங்கிரஸ் புறம்பான ஒரு கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் இறுதிப் பகுதிக்கும் விடையிறுக்கவேண்டியது அவசியம். திரு. சங்கரப்பிள்ளை தாம் தமிழ்க்காங்கிரசிலிருந்து விலகியதற்காகக்கூறும் காரணங்களில் அவருக்கே நம்பிக்கை இருக்குமானால், அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே விலகியிருக்கவேண்டும். இன்று எவ்வித சந்தர்ப்பசூழ்நிலைகள், தாம் கட்சியிலிருந்து விலகக் காரணமாயிருப்பதாக திரு. சங்கரப்பிள்ளை கூறுகிறாரோ, அச்சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்றோ உருவாகிவிட்டன. அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ்க்காங்கிரசிலிருந்து வெளியேறியிருந்தால், நண்பரின் கடிதத்தில் வருணிக்கப்பட்டுள்ளதுபோல் அவரது விலகல் துணிச்சலானதும், விவேகமானதும், நேர்மையானதுமெனக் கூறலாம்.

இறுதியாக, எனது முந்திய கடிதத்திற் கூறப்பட்டது போல, தேய்வடைந்த கட்சி வளர்ச்சியடைவதும், எதிர்க்கட்சி ஆட்சிபீடமேறுவதும், ஜனநாயக அமைப்பில் ஏற்படும் நிகழ்ச்சிகள். நான் எனது கடிதத்திற் குறிப்பிட்டதுபோல, இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு காலத்தில் வளர்ச்சியுற்றிருந்த யு. என். பி. 1956ம் ஆண்டுத் தேர்தலில் 8 அங்கத்துவ பீடங்களை மட்டும் எட்டிப்பிடிக்க முடிந்தபோது, அன்றே அரசியல் அஞ்ஞாதவாசம்போகத் தீர்மானித்திருந்தால். இன்று ஆட்சிபீட மேறியிருக்கமுடியாது எனவே, தோல்விகளைக் கண்டு துவளாது, தொடர்ந்து தனது கொள்கையை முரசறைந்து முன்னெடுத்துச் சென்ற பெருமை ஜி ஜி.க்குரியதாகும்.

ம. இளங்கோவன்
நெல்லியடி, கரவெட்டி.

---

## உற்சவமும் விரிவுரையும்

[யாழ்ப்பாணம்]

உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது 24 ம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் தினமும் இரவு 8 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாஸ்சாரிய சுவாமிகளின் இன்னிசை விரிவுரை இடம் பெறும்.

(அ)

"வடபகுதித் தேர்தல் முடிவுகளை

# தேசாய், எம்.ஜி.ஆர்., கலைஞர்

## கவனித்துக் கொண்டிருக்கின்றனர்"

### நல்லூரில் எதிர்க்கட்சித்தலைவர்

[யாழ்ப்பாணம்]

"வடபகுதியில் நடைபெறும் தேர்தலை இந்தியப் பிரதமர் தேசாயிலிருந்து திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு மு கருணாநிதியும், அ தி மு க தலைவர் திரு எம் ஜி ஆரும் வெகுஉன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லூர் அரசடிப் பூங்காவிற்கு முன்னால் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவரும் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு ஏ அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினார்.

திரு மனோகர் க் கடமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில்கூறியதாவது: வடபகுதி மக்கள் 77ல் தமிழ்ஈழத்தை ஆதரித்து வாக்களித்தனர் அந்த நிலை மாறிவிட்டதாகவும் தமிழ்மக்கள் நாட்டைப்பிரிக்க விரும்பவில்லையென்றும், ஐக்கியதேசியக்கட்சியினரையும் ஒன்றுபட்ட இலங்கையையுமே தமிழர் விரும்புகின்றனர் என்றும் ஆட்சியாளர் சார்பில் அமைச்சர் தொண்டமான் இந்தியா முழுவதும் பிரசாரம் செய்துள்ளார்.

அதனால் தமிழ்மக்கள் ஒன்றுபட்ட இலங்கையையா? அல்லது தனித்தமிழ் நாட்டையா விரும்புகிறார்கள் என்பதை அறிய தமிழ்நாட்டவரும், வடநாட்டவரும் 19ம் திகதியை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

எனவே தமிழ்மக்கள் ஒன்று சேர்ந்து 23 கூட்டணி அபேட்சகரையும் யாழ் மாநகரசபைக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

இந்த நாட்டிலே ஒரு சோசலிச சமதர்ம சமத்துவ சுதந்திர தமிழ்நாட்டை அமைக்க முற்பட்டபோது ஆட்சியாளரின் அட்டூழியம் தலைதூக்கியது. அடக்குமுறையால் எமது சுதந்திர உணர்ச்சியை அடக்கி ஒடுக்கிவிட முடியுமென அரசு மனப்பால் குடித்தது. அதற்கு மாறாக தமிழர் மத்தியில் மேலும் சுதந்திரதாகம் வளர்ந்துவந்துள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

எமது மக்களின் சுதந்திர உணர்வையும் ஒற்றுமையையும் கண்ட அரசாங்கம் எந்த வழியில் எமது ஒற்றுமையை சிதைக்கமுடியுமோ அந்த வழியில் எமது ஒற்றுமையைச் சிதைக்க முயல்கிறது. இவ் விடயத்தில் தமிழ்மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இம்மாதம் 26ம் திகதி நான் நியூயோர்க் செல்ல விருக்கிறேன், அங்குள்ளவர்கள் ஈழத் தமிழரின் பிரச்னையை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்

வடபகுதியில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியினரை ஏகமனதாக தேர்ந்து அனுப்புவதோடு ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு வடபகுதியிலிருந்து ஒரு வாக்கும் இல்லாது செய்ய வேண்டும். அப்போதுதான் நியூயோர்க்கில் வாழும் மக்கள் வடபகுதிமக்களின் சுதந்திர வேட்கையை அறிவார்கள்.

திருவாளர்கள் ஆர் விஸ்வநாதன், ஏ துரைராசஜசிங்கம், கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி மற்றும் பலரும் பேசினார்கள். [கொ-அ]

# இன்றைய பலன்

சித்திரைமாதம் 31-ம் திகதி

திங்கட்கிழமை

(14-5-1979)

**மேடம்:** கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்மதம் இடம்பெறலாம், தூற்றல்களை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், எதிலும் முன் யோசனை விரும்பத்தக்கது

**இடபம்:** குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைக்க முன்வருவார், டாக்டர்களுக்குச் சிறப்பானதினம்.

**மிதுனம்:** எதிர்பார்த்தவைகளில் தடைகள் ஏற்படும், தொழில்துறை அவ்வளவு திருப்தி அளிக்காது, அவசரப் போக்கைத் தவிர்க்கவும், பிறந்தகத்தின் ஞாபகம் தலை தூக்கும்.

**கடகம்:** எதிர்பாராத பணமுடை ஏற்படும், கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள், தொழில் துறையில் தொல்லைகள் தோன்றி மறையும்.

**சிங்கம்:** துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

**கன்னி:** பணவிடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். கல்வித்துறையில் பிள்ளைகளின் இறமை சுடர்பரப்பும், நீண்டநாள் நண்பர் ஒருவர் உதவிக்கு வருவார்.

**துலாம்:** கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கி நிற்பீர்கள், விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவே இருக்கும், சிக்கல் நிறைந்த தினமாகும்.

**விருச்சிகம்:** வெளியிடத்துத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும், தொழில் துறையில் வேலைகள் அதிகரிக்கும், உடல் நலம் பாதிக்கப்படக் கூடும், சுகாதாரம்வேண்டும்.

**தனுசு:** கன்னல் மொழி பேசிக் காரியத்தைச் சாதிப்பீர்கள், குடும்பத்தில் அமைதி நிலவும், வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும், வரவேற்கவேண்டிய தினம்.

**மகரம்:** மாணவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானதினம், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, தாய் வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், வாகன சுகமும் உண்டு..

**கும்பம்:** தங்கள் திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள், நீண்டகாலம் பயனளிக்கக்கூடிய பொருளொன்று இன்று கிடைக்கலாம்.

**மீனம்:** புத்திர வழியால் புகழ் உண்டு, புதிய பாதையில் தடை ஏற்படும், குடும்பத்தில் பிணைப்புக்கள் பலப்படும், பொதுவாக நல்ல தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# 'தமிழ்மக்களின் பிரச்னை சர்வதேச பிரச்னையாகிவிட்டது'

### மானிப்பாய் எம். பி. உரை

(புலோலி)

தமிழ் மக்களின் பிரச்னை ஒரு சர்வதேசப் பிரச்னையாகிவிட்டது. எமது பிரச்னையை உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டு விட்டன. இதனாலேயே ஜனாதிபதி ஜே ஆரும் பயப்படுகின்றார். இலங்கையில் தமிழினம் நசுக்கப்படுவதை அறிந்தால் வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கிவரும் சகல உதவிகளையும் நிறுத்திவிடும். இதனாலேயே ஜே. ஆர். தான் செல்லும் வெளிநாடுகளில் எல்லாம் இலங்கையில் தமிழர் சிங்களவர் ஐக்கியமாக வாழுவதாகவும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டு விட்டதாகவும் பிரசாரம் செய்து வருகின்றார்.

மானிப்பாய் எம் பி திரு. வி. தர்மலிங்கம் பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். இக் கருத்தரங்கு துன்பலையில் இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு த. இராமநாதபிள்ளை தலைமையில் நடைபெற்றது,

மானிப்பாய் எம். பி திரு வி. தர்மலிங்கம், மேலும் பேசுகையில் கூறியதாவது: "இன்னும் நான்காண்டுகளில் எமது நாட்டு அரசியல் நிலையில் ஏற்படும் மாற்றம்பற்றி தெரிந்துவிடும். முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்கள் செல்வாக்கு, பணம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே நடைபெற்றன. இப்போது கட்சியடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதால் தவறு செய்யும் உறுப்பினரைத் தண்டிக்கும் அதிகாரம் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது இதனால் உள்ளூராட்சி உறுப்பினர்கள் மத்தியில் லஞ்சம், ஊழல் ஆகியவற்றிற்கு இடமேற்படாது. சட்டத்தரணி எம். வேலும்மயிலும், க. க. ஜெயக்கொடி மற்றும் பலர் பேசினார்கள். (க)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க

# நிரந்தர ஊழியர் இருவர் தற்காலிக வேலைநீக்கம்!

(பலாலி)

தெல்லிப்பழை ப நோ கூ சங்க நிருவாகம் இரு நிரந்தர ஊழியர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

காரியாலய லிகிதரான திரு இ இராசகோபால், கிளைமுகாமையாளர் திரு செ சச்சிதானந்தம் ஆகிய இருவருமே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டவராவர்.

சங்கத்தின் யோசனசாலைக்குரிய கொள்வனவுச் சிட்டை காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்படவில்லையென்ற காரணத்திற்காகவே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக வேலைநிறுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளையும் ஊழியர் தொழிற்சங்கம் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

# 'சமதர்மலட்சியம் கொண் அரசை நிலைநாட்ட முயலு

## தமிழ்க்காங்கிரஸ் புதியயாப்பை செயற்குழு அங்கீகரித்தது

[யாழ்ப்பாணம்]

சமதர்மம் என்ற புனித தத்துவத்தை வலியுறுத்தி தமிழ்க்காங்கிரஸ், சாதி, மத, இன, சமூக வேறுபாடின்றி, மனிதன் சமமாக நடத்தப்படும் லட்சியத்தைக்கொண்ட அரசை நிலைநாட்ட முயற்சி செய்யும் என உறுதி கூறுகிறது.

தமிழ்க்காங்கிரஸின் செயற்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட புதிய யாப்பில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலத்தினால் வெளியிட்ட புதிய யாப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

### இலட்சியங்களும் நோக்கங்களும்

எந்த ஒரு அரசமைப்பின்கீழ் வாழும் ஒவ்வொரு பரும் சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி சுயாட்சியின் மெய்ப்பொருள் எய்தும் வாய்ப்புடையவராக இருத்தல்வேண்டும் என்ற அரச இயலின் அடிப்படை தத்துவத்தை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வற்புறுத்துகின்றது

மேற்கு வல்லரசுகளின் சாம்ராஜ்யப் பிடியிலிருந்து விடுபட்ட இலங்கையில் உருவாகிய அரசமைப்பின்கீழ் சிங்கள மொழி இன மக்கட்கு கிடைத்தவாறு சுயாட்சியின் மெய்ப்பொருள் அங்கு வாழும் தமிழ் மொழி இன மக்கட்கு கிடைக்கவில்லை என்பதை காங்கிரஸ் வலியுறுத்திக் கூறுகின்றது

தமிழ் மொழி இனத்தின் சுதந்திரத்தினை நிலை நாட்டுவதே காங்கிரசின் இலட்சியமாகும்

1. எனவே காங்கிரசின் தலையாய குறிக்கோள் யாதெனில் சிங்கள மொழி இனத்திற்கு கிடைத்ததுபோல, சுயாட்சியின் மெய்ப்பொருள் இலங்கை வாழ் தமிழ் மொழி இனத்திற்கும் கிடைக்கக் கூடிய நிலைமையை உருவாக்குதல் ஆகும்

இந்தியாயில் காங்கிரஸ், மனிதப் பண்பாட்டில் நம்பிக்கை இழக்கவேண்டியதில்லை என்ற அடிப்படையில், பேச்சுவார்த்தைகள் சமாதானமாக இசையச்செய்தல் ஆகியவை மூலம் வெவ்வேறு இனத்தின் தனிப்பட்ட நலன்கள், அபிலாசைகளின் முரண்பாடுகளுக்கு சுமுகமான தீர்வு காண முடியும் என்ற கருத்துப்படி,

இலங்கையின் முக்கிய அரசியல் சக்திகளையும் உள்ளடக்கும் வட்டமேசை மகாநாட்டின் வாயிலாக,

சிங்கள மொழி இனத்திற்கு கிடைத்ததுபோல், சுயாட்சியின் மெய்ப்பொருள், தத்துவ அடிப்படையிலும், செயலிலும், தமிழ் மொழி இனத்திற்கும் கிடைத்தல் வேண்டும் என்ற நியதியை, சிங்களப் பொது மக்கள் மட்டத்தில், ஒப்புக்கொள்ளச் செய்வதற்கு விசுவாசமாக முயற்சி எடுத்தல்.

ஆனால் மேலே கருதப்பெற்ற வட்டமேசை மகாநாட்டு நடவடிக்கைமூலம் தமிழ் மொழி இனத்திற்கு சுயாட்சியின் மெய்ப்பொருள் கிடைக்கச் செய்வது முடியாதாயின், தமிழ் மொழி இனத்தின் மரபு வழி தாயகத்தில் வாழும் மக்கள் சுயாட்சி என்ற அடிப்படைத் தத்துவத்தின் இணை பிரியாக் கிளைத் துணிபு ஆகிய சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து தமக்குரிய சுயாட்சியைப் பெறுதல் என்று வலியுறுத்துகின்றது

காங்கிரஸ் பின்வருவனவற்றை எய்த செயற்படுத்தக் கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் என்று வலியுறுத்துகிறது

[அ] தமிழ் மொழி இனம் சுயமரியாதையுடன் வாழ்வதற்காக இன, மத, மொழி உரிமைகளை நிலைநாட்டுதல.

[ஆ] தமிழ் மொழி இனத்தின் மரபு வழித் தாயகத்தை பாது காத்தல்

[இ] தமிழ் மொழி இனத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.

[ஈ] அடிப்படைச் சுதந்திரங்களைப் பேணல்.

[உ] தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கல்.

[ஊ] மனிதனுக்குமனிதன் தாழ்வுகற்பிக்கும் சாதிப்பாகுபாட்டினைஅறவே ஒழித்தல்,

[எ] தமிழ் மொழி இனத்தின் மொழி கலை, க... ரம், பண்பாடுஇவற்றி... பாட்டிற்காக பாடுபடு...

[ஏ] "தொழில், வேலைவாய்ப்பு போன்ற... களில் திறமைக்கு ம... பாரபட்சமற்ற சமச... மும் நிலவச் செய்தல்...

[ஐ] தாய்மொழியா... ழில் கல்வி பயில்வத... உரிமையை நிலைநாட...

[ஒ] தமிழ் மக்களி... முஸ்லிம் மக்களினதும்... ஒற்றுமையை வளர்... அவர்களின் தனித்... யைக் காத்திலும்

[ஓ] தமிழ் மொழி... தின் மரபுவழி தாயக... வெளியே வாழும்... மொழி மக்களின் ம... தமிழரின் நல உரி... உழைத்தல்.

[ஔ] உலகத் தமிழ்... இனத்துடன் உறவை... தல்.

[ஃ] உலகில் சுத... திற்காக, இனவிடுத... கப் போராடும் இயக்க... கும் மக்களுக்கும் அ... மும் ஆதரவும் காட்டு...

[நாளை தொ...

சாவகச்சேரியில்

# காங்கிரஸ் அபேட்சகர் கனவான்கள் ஒப்பந்த

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்கள் 15 பேரும் கனவான்கள் ஒப்பந்தம் செய்துள்ளார்கள்

இந்த ஒப்பந்தப்படி 4 வருட காலத்திற்குள் 15 பேரும், நகர சபை உறுப்பினர்களாக இருப்பார்கள்.

காங்கிரஸ் அபேட்சகர் 3குழுவாக பிரிக்கப்பட்டு முதல் குழு திரு. எஸ், பாலசுப்... யம் தலைமையில் ஒரு... பதவியிலிருக்கும். ஓ... முடிவில் இக்குழுவில்... பேரும் ராஜினாமாசெ... திரு. சு, கனகரத்தின... மையில், இரண்டாவ... மற்ற ஒருவருடம் ப... இருக்கும். வருட... இரண்டாவது குழுவி... 5 பேரும் ராஜினாமா... திரு. அரசரத்தினம்... யிலான குழு கடை... வருடங்களும் பதவ... கும்.

## காற்றுடி நீர்ப்பாசன திட்டம்

(புலோலி)

யாழ், மாவட்டத்தில் காற்றுடி நீர்ப்பாசனம் மூலம் நீரிறைக்கும் முறை, விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக திருநெல்வேலியில் உள்ள அரசினர் விவசாயப் பண்ணையில் காற்றுடி நீர்ப்பாசனம் பரீட்சார்த்தமாகப் பொருத்தப்பட்டிருக்கின்றது.

இக் காற்றுடி நீர்ப்பாசனக் குறைந்த செலவில் மேற்கொள்ள முடிவதால் சாதாரண விவசாயிகளும் பயன் பெறக் கூடியதாக இருக்கின்றதென்றும் இதன்மூலம் நீரிறைக்கும் இயந்திரத் தட்டுப்பாட்டிற்குப் பரிகாரம் காண முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அன்பளிப்...

(உடுப்பிட்டி)

இலங்கையிலுள்ள... களினால் கலை வேலைப்... டன் தயாரிக்கப்பட்ட... இலங்கை மேற்றிரா... களினால் கத்தோலிக்... சபையின் தலைவர் பா... இரண்டாம் அருளப்ப... ணடிகளுக்கு அன்ப... வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 22ம திகதி இ... யைச் சேர்ந்த ஆயர்க... சேர்ந்து இப்பரிசைப்... பாப்பரசரிடம் வழ... இலங்கையிலுள்ள... ராணிமார்களுடைன... பின்போது பாப்ப... இப்பரிசு இலங்கைக்... லிக்க மக்கள் சார்பில்... கப்பட்டது.

வல்வெட்டித்துறையில்

# பொலிஸ் அதிரடிப் படை பிரிவினர்

[கரணவாய்]

வல்வெட்டித்துறையில் நகர சபைத் தேர்தல் நடைபெற விருப்பதையொட்டி பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப் பட்டுள்ளது

இதன் பொருட்டு விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் கொழும்பிலிருந்து வந்துள்ளனர்

திரு பி கருணாரத்... மையிலான இந்த... படையில் 35 பொலிஸ்... டபிள்கள் உள்ளனர்

பொலிஸார், ரோ... வடிக்கைகளிலும் ஈடுப... னர்

## "தேர்தல் முடிந்ததும் வடக்கில்
# 70 யு.என்.பி. அபேட்சகர்களை
## கொண்ட அதிகார அபிவிருத்திசபை உருவாகும்
### பருத்தித்துறையில் திரு. கணேசலிங்கம்

[புலோலி]

இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களையும் ஒன்றாக நடாத்தவே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன விரும்புகிறார். எமது முன்னேற்றத்திலும், எமது பகுதி அபிவிருத்திகளிலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்திவருகிறது. உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தமிழ்ப்பகுதிகளிலும் அரசாங்கத்தின் உதவியைப்பெற்று அபிவிருத்திகளை மேற்கொண்டு முன்னேற்றுவதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்ப் பகுதிகளிலும் போட்டியிடுகின்றது.

வடபிரதேச ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளரும், வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சித் தேர்தல் குழுத் தலைவருமான திரு. கே. கணேசலிங்கம் பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்துப் பருத்தித்துறையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தொடர்ந்து பேசிய திரு. கணேசலிங்கம் கூறிய தாவது: கடந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தே வெற்றி பெற்றனர். ஆனால் தமிழீழத்திற்காகப்பாடுபடுபவர்கள் நகர அபிவிருத்திக்கான உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவது அவருனது நகர அபிவிருத்திக்கும் தமிழ் ஈழத்திற்கும் சம்பந்தமில்லை. தமிழ் ஈழத்தை இலகுவில் பெற்றுவிட முடியாது. அரசாங்கத்தை எதிர்த்தே தமிழீழத்தைப்பெறும் முயற்சியை மேற்கொள்ளலாம். இவ்வாறு அரசாங்கத்தை எதிர்ப்பவர்களினால் அந்த அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள் போன்ற உதவிகளை ஏற்று எவ்வாறு நகர அபிவிருத்தியை செய்யமுடியும்? இதற்கு அவர்கள் முன்வருவார்களா? தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதல்ல எமது நோக்கம் நகரின் அபிவிருத்தியே எமது நோக்கம்.

வடபகுதியின் உள்ளூராட்சித் தேர்தல்களில் எழுபது ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுக்கூடாகவே வடபகுதி அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்ததும் இந்த எழுபது பிரதிநிதிகளையும் கொண்ட அபிவிருத்தி அதிகார சபை உண்டாக்கப்பட்டு, ஊழலற்ற திறமையான நிர்வாகத்தின் மூலம் வடபகுதி அபிவிருத்திகளை மேற்கொண்டு இப்பகுதியைச் செழிப்பான பகுதியாக்குவதே எமது நோக்கமாகும்.

---

## "சுயேச்சை வாதிகளாலேயே பாரபட்சமின்றிச் சேவையாற்ற முடியும்"
### பருத்தித்துறையில் திரு. வீரவாகு

[புலோலி]

"உள்ளூராட்சித் தேர்தல்கள் நகர அபிவிருத்திக்காகவே நடைபெறுகின்றன. இத் தேர்தல்களில் அரசியலைக் கலக்கக் கூடாது. அரசியல்கள் உள்ளூராட்சித் தேர்தல்களைத் தமது செல்வாக்கிற்காகப் பயன் படுத்திவிடும். எனவே அரசியல் வேறுபாடுகளை மறந்து நகர அபிவிருத்திக்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கையாளவேண்டும்."

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக்குழு வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் குழுத்தலைவர் திரு மு பொ வீரவாகு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பன்னிரண்டு சுயேட்சை வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

திரு மு பொ வீரவாகு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: பருத்தித்துறை நகரத்தின் அபிவிருத்தி கடந்த பலவருடங்களாகத் தடைப்பட்ட நிலையிலேயே இருந்து வந்திருக்கின்றது. இதனால் பருத்தித்துறை மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் சுயேட்சையாக இயங்குபவர்களாலேயே எதுவித பாரபட்சமுமின்றி நகரின் அபிவிருத்திக்காகச் சேவையாற்ற முடியும்.

சுயேட்சைக்குழுவினரால் இக் கூட்டத்தில் விஞ்ஞாபனம் வெளியிடப் பட்டது. [●]

---

## இன்று விழாவெடுக்கும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்
-- செ. மெற்றுஸ்மயில் --

முல்லைத்தீவுத் தொகுதியிலே உதவி அரசாங்க அதிபர் பிரிவாக விளங்கும் புதுக்குடியிருப்புக்கிராமத்தின் மகாவித்தியாலயத்தில் இன்று சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிதாகக்கட்டிய விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்புவிழாவும், பழையமாணவர்களினால் பரிசளிப்பு விழாவும், பெற்றோர்களினால் கலை நிகழ்ச்சிகளுடன் பெற்றோர்தினவிழாவும் நடைபெறுகின்றன.

புதுக்குடியிருப்புக் கிராமம் பண்டாரவன்னியன் ஆட்சியின் கீழ் இருந்த பழையகிராமமாகும் எனினும் அந்நியரினால் பண்டாரவன்னியன் முறியடிக்கப்பட்டபின் ஏற்பட்ட அந்நியரின்மதம்பரப்புதலுக்கு உட்பட்ட இக்கிராமம் ஒரு றோமன் கத்தோலிக்க பாடசாலை மூலமாகவும், ஸி. ஸி. பாடசாலை மூலமாகவும் கல்வி போதிக்கப்பட்டு வந்துள்ளது. இக்கிராமத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவீதமானோர் இந்து மதத்தவர்கள் வாழ்ந்துவந்தபோதும் சைவ சமயம் படிக்கும் வாய்ப்பு இல்லாதிருந்தது. இக்காலத்தில் 1954ம் ஆண்டு முன்னாள் தலைமையாசிரியர் திரு. மு. இரத்தினம் இந்துபோட் திரு இராஜரத்தினத்தின் துணையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையே இன்று புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயமாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலை சிறு அளவில் திரு மு இரத்தினம் ஓலையால் வேய்ந்து கட்டினாலும், இப்பாடசாலையைக் கட்டிமுடிக்க இக்கிராமத்து அயல் கிராமத்து பெற்றோர்களும், மாணவர்களும் கைகொடுத்துதவினார்கள். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது சைவ சமயப் பிள்ளைகள், சைவசமயத்தைப் படிக்கவும், பன்னிரு தேவாரத்தைப் படிக்க வும் கட்டாய பாடமாகியதோடு, இந்துக்கோவிலும் கட்டி இணைக்கப்பட்டு, வழிபாட்டுமுறைகளையும், சமய விழாக்களை ஏற்படுத்தி, சமய உணர்ச்சியையும் புகட்ட ஏதுவாக இருந்தது சமயக்கல்வியோடு மட்டும் நின்றுவிடாமல் முன்தங்கிய பட்டணங்களில் படிக்கும் மாணவர்களுக்குள்ள கல்விபடிக்கும்வசதிகளையும் ஏற்படுத்தி முன்னேறிய பாடசாலைகளின் பரீட்சை முடிவுகளுக்கு எவ்விதத்திலும் விட்டுக்கொடாத பெறுபேறுகளைப் பெறும் வாய்ப்பையும் ஏற்படுத்தித்தந்தவர் திரு. மு. இரத்தினம்.

இப்பாடசாலையின் இரண்டாவது துரிதவளர்ச்சி காலஞ் சென்ற முன்னாள் தலைமையாசிரியர் கு வி. செல்லத்துரை அதிபராக இருந்தகாலமாகும். அவர் சேவையாற்றிய காலத்தில் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக தனது பணத்தைச் செலவழித்துக் கட்டிடங்களைக் கட்டினார். விஞ்ஞானக் கல்வியைப் புகுத்தினார் கல்லூரி பலவிதத்திலும் சிறப்புப் பெற்றுவந்தகாலம் இக்காலம். அவர் பெற்றோர்களது, மாணவர்களது, பழைய மாணவர்களது அன்பையும் ஒத்துழைப்பையும் பெற்றவர். இதனால் பெரிய ஒருவிளையாட்டுமைதானத்தையே சீர்திருத்தி அமைத்ததுடன் மேலதிக கட்டிடங்களையும் அமைக்கக் காரணமாக இருந்தார்.

மூன்றாவது வளர்ச்சிக்கட்டம் தற்போது அதிபராகவிருக்கும் திரு ஏ கே. மகாலிங்கத்தின் காலமாகும். அவருடைய சிந்தனையெல்லாம் கல்லூரியின் முன்னேற்றம் பற்றியதே. இவர் சேவைக்கு வந்தபின்பு கட்டிடங்கள் அதிகம் மேலதிகமாகக் கட்டப்பட்டுள்ளன. இவரது சேவையின்சின்னமாக விஞ்ஞான ஆய்வுகூடம் மிளிர்கிறது. (அ)

---

## வேலைநிறுத்தம்

[நெல்லியடி]

உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் அனைவரும் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இரண்டு மாதச் சம்பளம் நிர்வாகத்தினால் வழங்கப்படாததை அடுத்தே ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

---





பெரு லாபம் பெற
கிரமக்சோன்
நெல் வயலில்
முறையைப் பாவியுங்கள்

கிரமக்சோன் முறை இதோ!

- 1 ஏக்கருக்குத் தெளிக்கையில் 4 அவுன்ஸ் தெளி கலவையை மீதம் வையுங்கள்.
- மறுநாள், தவற விட்ட இடங்களில் இதைத் தெளியுங்கள்.
- 3 முழு நாட்கள் கழிந்ததும் களைகள் முற்றாக கும்படி வயலில் நீர் பாய்ச்சுங்கள்.
- 5 நாட்களின் பின் மீண்டும் நீர் வடிய விட்டு உழுங்கள்.
- பரம்படித்து, உலர் பசளை தெளித்த பின் விதையுங்கள்; அல்லது நாற்று நடுங்கள்.

% விளைச்சல் ஏக்கருக்கு 12 புசல் வீதம் அதிகரிக்கும்.

கிரமக்சோன் முறை தரும் பயன்கள் இதோ!

- ஓர் உழவுச் செலவு மிச்சப்படும்.
- மண் உழுவதற்கு இலேசாக மெதுமைப்படும்.
- பத்து நாளில் பயிரிடும் வேலைகளை முடித்து விடலாம்.
- மற்றக் களைகளுடன் சல்வினியாவும் கட்டுப்படும்.
- மண் செழுமையும் பசுமையும் அடைவதால் பயிர்கள் மேலும் செழித்து வளரும்.
- அழுகி உக்கும் களைகளும் பயிர்களுக்கு உரப் பசளையாகி விடும்.
- நெல்லோடு புதிதாக வளரும் களைகளும் பெருமளவு கட்டுப்படும்.
- நீர் மிச்சப்படும்; நீர்ப் பாசன நேரமும் குறையும்.

CIC

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட் (கொழும்பு)

ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, த. பெ. எண் 352, கொழும்பு 1. தொலைபேசி: 25421 - 8

# 'மாவட்ட அபிவிருத்திசபையே தொகுதிவேலைகளுக்குபணம் ஒதுக்கும்'

## சாவகச்சேரியில் குமார்

[சாவகச்சேரி]

தொகுதி அபிவிருத்திக்கு இனிமேல் எம். பி.க்கள் பணம் ஒதுக்கமாட்டார்கள். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் அங்கத்தவர்களாகக்கொண்ட மாவட்ட அபிவிருத்திச்சபைகளே தொகுதி அபிவிருத்திக்கு இனிமேல் பணம் ஒதுக்கும்.

சாவகச்சேரி டச் வீதியில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்திற்கு முன்னர், தனங்கிழப்பு வீதியில் ஒரு தமிழ்க் காங்கிரஸ் கிளைக் காரியாலயம் திறந்துவைக்கப்பட்டது.

திரு. ஆர். சந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

நகரசபையால் மட்டும் நகர அபிவிருத்தியைக் கவனிக்க முடியாதென்றும். அத் தொகுதி எம். பி.யும் பன்முகம்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்திலிருந்து பணம்ஒதுக்கவேண்டுமென்றும் இதற்கு எம். பி.யின் கட்சியைச் சேர்ந்தவராக நகரசபைத் தலைவர் இருந்தால் தான் ஒத்துழைக்க முடியுமென சாவகச்சேரி எம். பி. தெரிவித்துள்ளார்.

இனிமேல் மாவட்ட அபிவிருத்திச் சபைதான் தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம் ஒதுக்கும், முன்பு இச் சபைகள் இங்கு இல்லாததினால்தான் எம். பி.க்கள் பணத்தை ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இனிமேல் எம். பி.க்கள் பணம் ஒதுக்கமாட்டார்கள்.

சாவகச்சேரி கூட்டணி பட்டியலில் சட்டத்தரணி திரவியநாயகத்தைத் தவிர வேறு காங்கிரஸ் அபேட்சகர் எவரும் இல்லை.

திருவாளர்கள் க. கனகரத்தினம், எல். பாலசுப்பிரமணியம் உட்பட மற்றும் பலரும் பேசினர். [க]

# பருத்தித்துறை தேர்தல் பிரசாரம்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இன்றும், 15-ம், 17-ம் திகதிகளிலும் நடைபெறுகின்றன.

இன்று சனிக்கிழமை மாலை ஆத்தியடிப்பிள்ளையார் கோவிலடியில் முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெறும். 15ம் திகதி தும்பளை கணக்கிலாவத்தைப் பிள்ளையார் கோவிலடியில் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

17-ம் திகதி பருத்தித்துறை சிக்கமுனை மைதானத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் கூட்டம் நடைபெறும.

# காகிதத் தொழிற்சாலை தரம் உயரும்

[கொழும்பு]

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையை தரம்உயர்த்துவதற்கான உதவியையளிக்க மேற்கு ஜேர்மனி அரசு முன்வந்துள்ளது.

# 55,000 ரூபா அபராதம்!

(புலோலி)

இந்தியாவிலிருந்து கடத்திக் கொண்டுவரப்பட்ட ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான சாரங்களுடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட காரையும் கைப்பற்றிய பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகரா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி, இவற்றை காங்கேசன்துறை உதவிச் சுங்கக் கலெக்டரிடம் ஒப்படைத்ததையடுத்து ஐம்பத்தையாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் சாரங்கள் யாவும் பறிமுதல்செய்யப்பட்டன.

# மாற்றுப்பயிராக சோயாஅவரை

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்தில் சோயா அவரைச் செய்கையை விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்தி ஊக்கம் கொடுப்பதற்கு யாழ்மாவட்ட விவசாயப்பகுதியினர் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

குறுகியகாலத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய சோயா இன விதை வர்க்கங்களை தெரிவுசெய்வதன் பொருட்டு யாழ் மாவட்டத்தில் ஒன்பது இடங்களில் பரீட்சார்த்த பரிசோதனைகள் நடைபெற்றுவருவதாக யாழ் மாவட்ட விவசாய அதிபர் திரு. நா. சிவமுத்துலிங்கம் தெரிவித்தார். யாழ் மாவட்டத்திலுள்ள நெல்வயல்களில் நெல் அறுவடை முடிந்தவுடன் மாற்றுப்பயிராக சோயா அவரையை பயிரிடலாம் என்றும், யாழ் மாவட்டம், வவுனியா போன்ற வரண்ட பிரதேசங்களில் சோயா அவரையை விவசாயிகள் பயிரிட்டு அதிக பயன்பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# 'தமிழின ஒற்றுமையைக் குலைக்கவே குமார் காங்கிரஸ் போட்டியிடுகின்றது'

## நுணுவில் கூட்டத்தில் 'கதிர்'

[கொடிகாமம்]

72-ம் ஆண்டு தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரசும் சேர்ந்தே கூட்டணி உருவானது. கூட்டணி டிக்கட் கொடுக்காததினாலேயே குமார் பொன்னம்பலம் ஜே. ஆரின் ஆலோசனையுடன் புதிய காங்கிரசை உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக ஆரம்பித்தார்.

நுணுவில் மேற்கில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் இ. கந்தையா தலைமையில்நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

குமார் பொன்னம்பலத்தின் புதிய காங்கிரஸ் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது தமிழினத்தின் ஒற்றுமையை குலைப்பதற்காகவே.

77-ம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கிய தமிழ் ஈழக் கோரிக்கையிலிருந்து மக்கள் மாறிவிட்டார்கள் என்று உலகிற்கு காட்டுவதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி வடக்கில போட்டியிடுகிறது

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காகவே குமார் பொன்னம்பலத்தின் காங்கிரசிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது, இதனுல் அவர் தமிழினத்தின் ஒற்றுமையைக்குலைக்க முயற்சிக்கிருர்

வண்ணை ஆனந்தன். சி. க. மயில்வாகனம் மற்றும் பலர் பேசினர் [க]

# கருத்தரங்கு

(வெள்ளவத்தை)

'பெருந்தோட்டத்துறை தொழிற்சங்க நடவடிக்கையில் பெண்களின் பங்கு' எனும் தலைப்பில் நாளை நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் பாரியார் சிறப்புரை நிகழ்த்துவார்.

கருத்தரங்கை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சர்வதேச சுதந்திர விவசாய பெருந்தோட்ட மற்றும் இணைப்புத் தொழிற்சங்க சம்மேளமும் ஏற்பாடு செய்துள்ளது.

# புதிய பஸ்சேவை

[நெல்லியடி]

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினுல் கொடிகாமத்திற்கு நடாத்தப்படும் சேவையொன்று, வதிரிக்கு ஊடாகவும் நடாத்தப்பட்டு வருகின்றது.


அல்வாய், வதிரி, நவிண்டில் போன்ற மக்களின் நீண்டநாள் கோரிக்கையின் பேரிலும் உடுப்பிட்டி பாராளுமன்ற பிரதிநிதியின் முயற்சியாலும் இச்சேவை வதிரிக்கு ஊடாக நடாத்தப்பட்டு வருகிறது.

# கங்காணிமார் நியமனம்

[மாவிட்டபுரம்]

நாடெங்கும் நிலவும் கங்காணிமார் பற்றுக்குறையைப் போக்க 650 பேருக்கு சுகாதாரஇலாகாவினுல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார இலாகாவில் கடமைபுரிந்த கனிஷ்ட சிற்றூழியர்களிடையே சேவை, அனுபவம், திறமை என்பவற்றை கருத்திகொண்டு இந்த கங்காணிமார்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் யாழ் மாவட்டத்திற்கு 10 ஆண்களும் 15 பெண்களும் நியமனம்பெறஉள்ளனர்.

பொன்னான வாழ்விற்கு வழிவகுக்கும் திட்டம்
பற்றிய முழு விபரமும் அறிய
இக் கூப்பனை எமக்கு அனுப்பவும்.

**த பிறின்ஸ் கொம்பனி லிமிட்டட்**
தொலைபேசி: 23861-2

பெயர்: ______
விலாசம்: ______
தொலைபேசி: ______

# நிம்மதி...
## மாதாமாதம் உங்களுக்கு வருவாய் கிடைப்பது திண்ணம்

பலவருடங்களுக்கு உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கிரமமாக மாதாமாதம் உங்கள் வருமானத்தை சிறப்பிக்கக்கூடிய உத்தரவாதத்துடன் அளிக்கும் அரியதோர் திட்டம்.

பொன்னான வாழ்விற்கு இறவுகோலான திட்டம்
உங்கள் வருங்காலத்தை ஒளிமயமானதாக்கி இருபத்தைந்து வருடங்களுக்கு மாதாமாதம் மேலதிக வருமானத்தை அளிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

எதிர்காலத்தை ஸ்திரமாக ஆரம்பிக்க ரூபா 100/- போதுமானது.

பொன்னான வாழ்விற்கு இறவுகோலான திட்டத்தில் பல தரப்பட்ட திட்டங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றை நேரில் வந்து தெரிவு செய்யுங்கள். எதிர்காலத்தை ஸ்திரமாக்கும் உத்தரவாதமான திட்டம்.

**த பிறின்ஸ் கொம்பனி லிமிட்டட்**
கொழும்பு 1. தொலைபேசி: 23861-2

கிளைகள்
தொலைபேசி 7680
185/2, ... வீதி, குருணாகல்
தொலைபேசி 891
15 2/2 L. G. J. ... கட்டிடம், ...
தொலைபேசி 2333
80, ... வீதி, பொலன்னறுவை

CEYLINCO ADS.

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார் ஜானகி நடித்த
**ஒளிவிளக்கு**
ஈஸ்மன் கலர் புதிய பிரதி

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்–கே. ஆர். விஜயா நடித்த
**நாணல்**
[புதிய பிரதி]

20-வது வாரம்
**வின்சர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
**ராணி** (யாழ். நகர்)
ஜெமினி – சரோஜாதேவி – ரங்கராவ்
**குலவிளக்கு** (புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
ராமராவ் - அஞ்சலிதேவி
**பட்டி விக்கிரமாதித்தன்**
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
**வியட்நாம் வீடு**

மகத்தான வெளியீடு !
சுமார் 80 லட்ச ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு !!
இப்பொழுது காட்சிக்குக் காட்சி ஜனத்திரளுடன் காண்பிக்கப்படுகிறது.
**சாந்தி** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
இராஜேந்திர குமார்-இரட்டைவேடங்களில் பிரமாத நடிப்பு
ஹேமமாலினி—ஹிந்தித் திரைவானின்-கனவுக் கன்னி
பானுரேகா—ஜெமினி கணேசனின்—மகள்
இன்னும் பலர் நடிக்கும்
இனிய ஈஸ்ட்மன்வர்ணத் திரையோவியம்.
**"கோரா அவுர் காலா"**
இசை : லக்ஷ்மிகாந்த் பியரலால்
காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பு-குதிரை ஓட்டங்கள் சண்டைக் காட்சிகள்.



**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30.
சொட்டகை நிறைந்த காட்சிகளாகக் காண்பிக்கப் படுகிறது.
**த டவரிங் இன் பேர்னோ**


அடுத்த...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மணி; அரச சட்டத்தரணி புலிகள் தொடர்பான இத் தஸ்தாவேஜை இங்கு பதிவு செய்வதானால் அதை தந்தவரின் பெயரையும் சேர்த்துப் பதிவு செய்யவேண்டும்.

சட்: பொலிசாரேதன் தந்தனர். ஆனால் நான் இதை இங்கு பதிவு செய்போவதில்லை.

[நாளை தொடரும்]


**நாகம்ஸ்** (கன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
**ஆண்டவன் கட்டளை**

**வெஸ்லி** (கரவெட்டி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-ராதாசலூஜா
**இதயக்கனி**

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

**REGAL** (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
**Aladin and the Magic Lamp**


# முல்லைத்தீவுப்பிரிவு விளையாட்டுவிழா

[முல்லைத்தீவு]

முல்லைத்திவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த 2ம, 5ம, 6ம திகதிகளில் முல்லைத்திவு மகா வித்தியாலய மைதானத்தில் அரசாங்க அதிபர் திரு. ஒஸ்ரின் ஜயவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

இறுதிநாளான 6ம் திகதி தேசியக்கொடியை முல்லைத் திவு மாவட்ட நீதிபதி திரு. எம். எஸ். எஸ், கொறியா ஏற்றினார்கள்.

பிரதம விருந்தினராக முல்லைத்திவு பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்லத்தம்பு கலந்துகொண்டார்.

சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்) சைக்கிள் ஓட்டம் (பெண்கள்) கரபந்தாட்டம், உதைபந்தாட்டம் எல்லே வலைப்பந்தாட்டம் இவைகளில் முல்லைத்திவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது மரதன் ஓட்டத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஞா. ஆனந்தராசா முதலாமிடத்தைப் பெற்றார்.

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த எம். அலாவுதீன் முதலாமிடம் (சைக்கிள் ஓட்டம்), சைக்கிள் ஓட்டம் (பெண்கள்) முதலாமிடம் செல்வி ஜெ ராணியும் பெற்று முல்லைத்திவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 228 புள்ளிகளைத் தட்டிக் கொடுத்து முதலாமிடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 66 புள்ளிகளையும், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 56 புள்ளிகளையும் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 14 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது முதலாமிடத்தைப்பெற்ற சகல வீரர்களுக்கும் வெள்ளிக்கிண்ணம் வழங்கியதோடு குழுநிலையிலான விளையாட்டுகளில் முதலாமிடத்தைப்பெற்ற ஒவ்வொரு குழுவிற்கும் கூடிய புள்ளிகளைப்பெற்ற பிரிவுக்கும் வெள்ளிக்கேடயம் வழங்கப்பட்டது சைக்கிள் ஓட்டத்தில் முதலாமிடத்தைப்பெற்ற வீரனுக்கு முல்லைத்திவு அருள் ஞானமலர் புதிய சைக்கிள் ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

விளையாட்டு விழாவின் செயலாளராக முல்லைத்திவு மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. ஏகாம்பரம் கடமையாற்றினார். [க]




**சேர்கோப்பூர்**
36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுன அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி, உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2–3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான
BAYER
பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6..

melADS

# யாழ். முஸ்லிம்பகுதி புதிய பஸ்சேவை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

"கடந்த இரண்டு வருட காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த முஸ்லிம் வட்டார பஸ்சேவையை மீண்டும் ஆரம்பித்துவைக்கவேண்டும், அதன் மூலம் முஸ்லிம் மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை குறைக்கவேண்டும் என்று நான் போக்குவரத்து அமைச்சரை கேட்டுக்கொண்டதன் மூலம் இன்று உங்களுக்கு ஒரு பஸ்சேவை ஆரம்பிக்கப்படுகிறது."

இவ்வாறு நேற்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் முஸ்லிம் பகுதிக்கான புதிய பஸ் சேவையை யாழ் மாவட்ட ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர் திரு. எஸ் கணேசலிங்கம் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

ஐக்கியதேசியக்கட்சி மாநகர சபை வேட்பாளர்களும் போக்குவரத்துச்சபை அதிகாரிகளும் பிரமுகர்கள் பலரும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

திரு. கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில்;

வடபகுதிக்கு விரைவில் புதிய பஸ்கள் கிடைக்க உள்ளன. இந்த பஸ்கள் கிடைத்ததும் உங்களுக்கு நல்ல சேவைகிடைக்கும்'' என்றார்.

''இன்று ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவை தினமும் ஓட்டுமடம் சந்தியிலிருந்து புறப்பட்டு, முஸ்லிம் கல்லூரி வீதி வழியாக கொட்டடி சென்று யாழ் பஸ்நிலையத்தை வந்தடையும் தினமும் ஆறு தடவை இப்பஸ்சேவை நடைபெறும்'' என்றும் அவர் கூறினார். [கொ]

# "எனக்கா பதவிமோகம்?" குமாரிடம் 'விசு' கேட்கிறார்

[யாழ்ப்பாணம்]

"திருவாளர்கள் இராசதுரையும் கனகரெத்தினமும் விலகியபின்னர் கூட்டணியின் செல்வாக்கு மட்டக்களப்பில் துப்பரவாக அற்றுப்போய்விட்டது என்று சிங்களப் பத்திரிகைகளும், இலங்கை வானொலியும் பிரச்சாரம் செய்கின்றன. இப்பொய்ப்பிரச்சாரம் எடுபடாது'' என்று தட்டாதெரு துரைராசா பூங்காவில் நடைபெற்ற கூட்டணித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நல்லூர்த் தொகுதி எம்பி திரு மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினர்.

திரு மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நானும் திரு. அமிர்தலிங்கமும் மற்றும் கூட்டணியினரும் மட்டக்களப்பிற்கு அண்மையில் சென்றபோது, மக்கள் எம்மை வரவேற்றதிலிருந்து மட்டக்களப்பு மக்கள் இன்னும் கூட்டணியையே விரும்புகின்றனர் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. தமிழ் இனம் எதிர்காலத்தில் சுபீட்சமாக வாழவேண்டுமென்று நினைத்தால், நாம் எடுத்துக்கொண்ட முடிவு சரி என்பதை நிலைநாட்ட நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியை ஒரேமுகமாக அனுப்பி கூட்டணிதான் தமிழ்மக்களின் ஒரேகட்சி என்பதை உலகறியச்செய்ய வேண்டும்'' என்றும் கூறினார்.

கூட்டத்தில் ஆர் விசுவநாதன் பேசுகையில்: "நான் பதவி ஆசை கொண்டவன் என்றும், உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணியினர் எனக்கு முதலிடம் கொடுக்கும்வரை கூட்டணியில் ஒருகாலும் காங்கிரஸில் ஒருகாலும் வைத்துள்ளதாகவும், மேடைமேடையாக குமார் பேசிவருகிறார். நான் பதவி ஆசை பிடித்தவனாக இருந்திருந்தால் 71-ம் ஆண்டு கிடைத்த சமாதான நீதவான் பதவியை 72ல் உதறி எறிந்திருக்கமாட்டேன். பல முறை என்னை நாடிவந்த பதில் நீதிபதிப் பதவியைக்கூட உதறித் தள்ளியவன் நான், எனது தொகுதிமக்கள் பலமுறை என்னை நாடி பாராளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் போட்டியிடும்படி கேட்டபோதெல்லாம் மறுத்திருக்கிறேன் அது மட்டுமல்ல காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்ட திரு அருளம்பலத்திற்காக எவ்வளவோ பாடுபட்டவன் நான், அதேபோல உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்ட மறைந்த தலைவர்களான துரைராசா, சிவசுப்பிரமணிய மாஸ்டர், காசிப்பிள்ளை ஆகியோரின் வெற்றிக்காகப் பாடுபட்டதோடு என்னைப் போட்டியிடும்படி கேட்ட எனது ஆதரவாளர்களையும் சேர்த்து காங்கிரஸ்கட்சியின் வெற்றிக்காக கஷ்டப்பட்டேன். அப்படிப் பாடுபட்ட என்னைப் பார்த்துத்தான் பதவிமோகம் படித்தவன் என்று கூறுகிறார் குமார்!'' என்றார்.

"காங்கிரஸில் ஒருகாலும் கூட்டணியில் ஒருகாலும் வைத்திருந்தேன் என்று பொய் சொல்லித்திரியும் தம்பி குமாரின் சிந்தனைக்கு ஒன்று கூறி வைக்கவிரும்புகிறேன் நான் காங்கிரஸில் ஒருகால் வைத்திருந்தால் எப்படி தம்பி குமாருக்கும் சிவசிதம்பரங்களுக்கும் திருநாவுக்கரசுவுக்கும் எதிராக நடந்த வழக்கில் குமாருக்கு மாறாக எதிரிகளான மு சிவசிதம்பரம், த சிவசிதம்பரம் தா திருநாவுக்கரசு ஆகியோர் சார்பில் ஆஜராகி வழக்கை நடத்தியிருக்கமுடியும்? இதிலிருந்தே நான் குமாருக்கு மாறாக கூட்டணியில் சேர்ந்துள்ளதை மக்கள் அறிவார்கள்'' என்றும் திரு விசுவநாதன் கூறினார். [கொ]

# தமிழ்ஈழம் அமைப்பது

## கூட்டணியின் நோக்கமில்லையாம்!

### குமார் குற்றச்சாட்டு

[யாழ்ப்பாணம்]

"தமிழ்பேசும் மக்களை கூட்டணியினர் நன்றாக ஏமாற்றி வருகின்றனர். இவர்களைத் தமிழர்கள் தட்டிக் கேட்கும் வரை தமிழ்மக்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை''

இவ்வாறு ஈச்சமோட்டையில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில் கூறினார். திரு. கே பி நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு குமார் பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"போராட்டத்தின் மூலம் தமிழ்ஈழம் அமைப்போம் என்று கூறி 1977ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற கூட்டணியினர், இதுவரை சாத்வீக முறையிலா அன்றி ஆயுதமேந்திய போராட்டம் நடத்தினர்? தமிழ்ஈழத்தைப்பெற முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிந்திருந்தும் தமிழ் ஈழம் என்ற பொய்ப்பிரசாரத்தின்மூலம்தான் தமிழ் வாக்கைப்பெற முடியுமென்பதை உணர்ந்து தமிழ்ஈழத்தைப் பற்றி மேடைமேடையாகப் பேசுகின்றனர் உண்மையில் தமிழ்ஈழம் அமைப்பது கூட்டணியினரின் நோக்கம் அல்ல. தமிழ்ஈழம் அமைப்பதுதான் இவர்களது நோக்கமென்றால், கூட்டணியினரால் 24-6-78ல் தயாரிக்கப்பட்ட யாப்பில், இலங்கையைப் பற்றியும் சிறிலங்காவைப் பற்றியும் சிங்கள மக்களோடு சகவாழ்வு ஒத்துழைப்பு என்றும் அந்த அடிப்படையில் சிங்கள மக்களோடு வாழ வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது ஏன்? உண்மையில் தனிநாடுதான் கூட்டணியினரின் முடிந்த முடிவென்றால், "இந்தியா ருடே'' என்ற அமெரிக்கப் பத்திரிகைக்கும், "ஏசியா வீக்'' என்ற சிங்கப்பூர் பத்திரிகைக்கும் திரு. அமிர்தலிங்கம் அளித்த பேட்டியில்; தனிநாட்டைப் பற்றிக் கதைத்தால் நாடு திரும்பியதும் மறியலில் போட்டுவிடுவார்கள் என்றும், அதைப்பற்றிப் பேசுவதே பயம் என்றும் கூறியுள்ளாரே! புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது திரு. அமிர்தலிங்கம் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தனிநாடு என்ற கோரிக்கையை நாம் விரும்பவில்லையென்றும். அது ஒரு 'நம்காட்' என்றும் கூறியுள்ளார். கூட்டணியினர் வாக்குகளைப் பெறுவதற்காக இடத்துக்கிடம் வேறுபட்ட வார்த்தைகளைப் பேசிவருகிறார்கள், இவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டியது வாக்காளர்களின் கடமை என்று கூறினார்.

இக்கூட்டத்தில் டாக்டர் ஏபிரகாம், திருமதி அந்தோனியார் சாமிநாதன், திரு. ஜிம்மி இராசரெத்தினம், திரு. சிவஞானம் ஆகியோரும் பேசினார்கள். [கொ]

## கூட்டணிக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகரசபை தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று கொழும்புத்துறை, முத்திரைச்சந்தி ஆகிய இடங்களில் நடைபெறும்.

நாளை 15-ந் திகதி குருநகர், அரியாலை, நாச்சிமார் கோவிலடி, வண்ணார்பண்ணை ஆனைப்பந்தியிலும் 16-ந் திகதி குருநகர், செம்மேருக், சனசமூக நிலைய மைதானம், நாவாந்துறை, சந்தர் மடம், ஈச்சமோட்டை, அரியாலை, கொட்டடி, கன்னாதிட்டியிலும் 17-ந் திகதி இறுதிக் கூட்டம் முற்றவெளி மைதானத்திலும் நடைபெறும். [கு]


## மரண அறிவித்தல்

சபாரத்தினம் J. P.

அச்சுவேலி - தம்பிப்பிள்ளை சபாரத்தினம் J. P. காலமானார். இளைப்பாறிய மாவட்ட நீதிமன்றக் காரியதரிசியும், ராஜலக்சுமியின் அருமைக்கணவரும், சுலோசனா [அதிபர் மீன்பிடி அமைச்சு] மாலினி [சட்டத்தரணி பிரவுன்ஸ் கொம்பனி], Dr. தமயந்தி [வைத்தியசாலை கம்பஹா], Dr முகுந்தகுமாரி [வைத்தியசாலை மாத்தறை], ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஞானேந்திரன் [UK]யின் மாமனாரும், மல்லாகம் ராஜரத்தினம், திருமதி சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், வேதாரணிய சேயோன், வேலாயுத சேயோன், விசாக சேயோன், தனலக்சுமி குணநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 'செங்கமலம்' அச்சுவேலியில் நடைபெறும். 2437


# வெளிமாவட்ட தமிழருக்கு தொ. கூட்டணி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"வடக்கு கிழக்கு தவிர்ந்த மாநகர சபை, நகரசபைத்தேர்தல் நடைபெறும் மாவட்டங்களில் வாக்களிக்கும் தகுதியுடைய தமிழ் வாக்காளர்கள், தமது வாக்குகளை தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் இடதுசாரிக் கட்சிகளுக்கே அளிக்கவேண்டும்''

இவ்வாறு, தமிழ் தொழிற்சங்க கூட்டணிச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் வெளியூர் மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் தொழிலாளர்கள், யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்துப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: அண்மையில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில, வெளிமாவட்ட தமிழ்வாக்காளர்கள், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் சோஷலிஸ கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு கோரியிருப்பது கவனத்திற்குரியது.

"இக்கட்சிகள் நமது நாமீக போராட்டங்களுக்கு ஆதரவு நல்கவேண்டும்'' என்றும் திரு. சம்பந்தன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். [செ]

## வடபகுதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது தமிழ்மக்களின் வாழ்வும் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் மாவட்டத்தின் அபிவிருத்தி என்றாலும் சரி எந்தப் பிரச்னை என்றாலும் தீர்க்க முடியாது.


## மாணவர் மதிப்பீட்டுப் பத்திரம்

(பாலர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை)

பிரதி ஒன்றின் விலை சதம் 15.

விபரங்கட்கு:

செட்டியார் அச்சகம்

430, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி- 7853. 2412



## மரண அறிவித்தல்

ந. நாகலிங்கம்

கட்டுவன் முன்னைநாள் கிராம விதானையார் நல்லதம்பி நாகலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (14-5-79) திங்கட்கிழமை தெல்லிப்பழை மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 2438


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945 & The Eelanaadu P 8 No: 49. Telegrams: Eelanaadu Telephone 889.